மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"உழைக்கும் கைகளே, உருவாக்கும் கைகளே,
உலகைப் புது முறையில் உண்டாக்கும் கைகளே,
ஆற்று நீரைத் தேக்கி வைத்து
அணைகள் கட்டும் கைகளே" (மேசையைத் தட்டும் ஒலி)

என்ற புரட்சித் தலைவர் அவர்களின் பாடல் வரிகளுக்கேற்ப உழைக்கும் கைகளுக்குச் சொந்தமான தொழிலாளர்கள்தான் ஏற்றமிகு அரசை உருவாக்க முடியுமென்று அறிந்து, அவர்களுக்கு ஏற்றம் தருகிற அரசு இது. மாண்புமிகு அம்மா அவர்கள் எண்ணத்தில் உள்ளதுபோல, ஏற்றம் பெறுகிற நாட்டுக்கு அழகியத் தோற்றம் தருகின்ற பெருமக்கள் தொழிலாளர்கள்தான். அவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்தவும், அவர்களின் பணி நிலைமைகளை மேம்படுத்தவும், நல்ல தொழில் உறவு வளர்வதற்கான சூழ்நிலைகளை உருவாக்கவும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு, பல உன்னதமான நடவடிக்கைகளை எடுத்து வருகிறது.

"மக்கள் நலம், மக்கள் நலம் என்றே சொல்லுவார்
தம் மக்கள் நலம் ஒன்றேதான் மனதில் கொள்ளுவார்"
(மேசையைத் தட்டும் ஒலி)

என்ற பாடல் வரிகளுக்கேற்ப தன் குடும்பத்திற்குச் சொத்தை சேர்ப்பதில் குறியாய் இருந்து தமிழகத்தைச் சோகத்தில் ஆழ்த்திவிட்டார்கள் கடந்த மைனாரிட்டி திமுக. ஆட்சியாளர்கள்.

"விழித்துக்கொண்டோரெல்லாம் பிழைத்துக் கொண்டார்" என்பதற்கேற்ப, "தமிழக மக்களின் விழிப்பு மாண்புமிகு அம்மா அவர்களின் ஜெயிப்பு" (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாட்டு மக்களை வையத்துள் வாழ்வாங்கு வாழ்விக்க வந்த தெய்வம் எங்கள் அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அம்மா அவர்கள் தமிழக மக்களின் உயிரெழுத்து. அவர்கள் ஆட்சிக்கு வந்ததும் போட்டார்கள் 7 கையெழுத்து. அதனால் மாறிப்போனது ஏழைகளின் தலையெழுத்து! நான் சொல்வது அனைத்தும் மெய்யெழுத்து! (மேசையைத் தட்டும் ஒலி)